முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 572**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.04.2021, வெள்ளிக்கிழமை

1. தர்ம சக்திகொண்ட அரங்கா வாழ்க வாழ்க
   தவசியாய் எந்தன் சக்தியாய் வாழும் தேசிகனே வாழ்க வாழ்க
   பெருமைமிக்க உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
   புகலுவேன் சுப்ரமணியர் யானும் இனிதே
2. இனிதே அரங்கன் தர்மமே
   இந்த உலகை மாற்றம் செய்யும்
   துணிவுகொண்ட அரங்கன் தொண்டர்படையே
   தேசத்தை சுத்தி செய்து ஞான லோகமாக்கும்
3. ஆக்கவே அரங்கனுள் என் சக்தி
   ஆக்கமாக இயக்கி வருதல் காண
   தேக்கமின்றி அரங்கன் புண்ணியவழியில்
   தொடர்ந்து வருகின்ற உலகமக்கள் மூலமே
4. மூலமாக அற்புதத்தை யான் நிகழ்த்தி
   மண்ணுலகை ஞான லோகமாக்குவேன்
   காலமதில் இருக்கின்ற பேரிடர்களையும்
   கருணைக்கொண்டு அரங்கன் ஆசி வழி இனிதே மாற்றுவேன்
5. மாற்றம்தந்து அரங்கன் வழிவழி வருபவர்க்கு
   மரணத்துன்பமில்லா வாழ்வு நிலை தருவேன்
   தருவேன் அவர்கட்கு ஞான வாழ்வும்
   தந்து அருள்புரிவேன் அவர்கட்கு உயர்வாழ்வும்
6. பெருமைபட ஆறுமுகன் என் அருள்பலமும் பிசகில்லாத பொருள்வளம் தர்மபலம்
   பலம் கூடி இந்த கலியுகத்தில் பரமானந்த சதாசிவ சற்குரு அரங்கன் குடில் தன்னில்
   வலம் வரும் உலகோர்க்கு வள்ளல் தன்மை
   வரமென வழங்கி வடிவேலன் அருள்புரிவேன்
7. அருள்மிக்க அரங்கனே உலகமாற்றத்தை
   அழியாமை கொண்டு செய்யவந்த ஞானியப்பா
   பெருமளவில் உலகோர் இந்த சூட்சுமம் அறிய பேரிடர்கள் பிரளயங்கள்
   போன்ற துன்பங்கள் அகன்றோடி இந்த யுகம் பாதுகாப்பை பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.